1972 மார்ச் 17]

பாரத் சேவக் சமாஜத்துக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நன்கொடை

*523 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரத் சேவக் சமாஜத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நன்கொடை ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பார்த் சேவக் சமாஜம், அரிசன நல சங்கம், தென் இந்திய முஸ்லீம் சங்கம் ஆகிய பொது நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கேட்டு மனு வந்தால், முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளிக்கும் செயற் குறிப்பை முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தீ, வெள்ளம், துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் இவைகளால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்களுக்கும், தொழில் நிறுவனங்களில் எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்படுகின்ற போதும் முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகின்றது. இது போன்ற தனிப்பட்ட நிறுவனங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்தால், பின் எல்லா நிறுவனங்களிடமிருந்தும் உதவி கோரி மனு வரக் கூடிய நிலைமை ஏற்படும். எனவே, இம்மாதிரி நிறுவனங்களுக்கு உதவி அளிக்க இயலாது.

உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைப் படிப்பு

*524. வினா திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் அறிவியல் சார்ந்த வேளாண்மைப் படிப்பையும் பாடமாக இணைத்து, வயல்வெளிகளில் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேளாண்மைபற்றிய அறிவைப் பாடப் பயிற்சியோடு சேர்த்துப் புகட்ட இப்பொழுதே வசதியுள்ளது. வயல் பயிற்சியைப் பொதுவாக எல்லா மாணவர்களுக்கும் அளிப்பது சாத்தியமாயிராது.

[1972 மார்ச் 17

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்போது உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள்—தேர்ச்சி பெற்றவர்களும், தேர்ச்சி பெருத வர்களும்—'ஒயிட் காலர்ட்' என்று சொல்லக்கூடிய அரசாங்க உத்தியோகத் தைத்தான் விரும்புகிருர்கள். எனவே ,விரும்புகின்ற மாணவர்களுக்காவது வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு ஏற்படும் வகையில் வாரத்திற்கு ஒரு முறையாவது மாணவர்களை வயல்வெளிகளுக்கு அழைத்துச் சென்று டிராக்டர்கள் போன்ற வேளாண்மைக் கருவிகளை இயக்குவதற்கும் மற்ற நவீன வேளாண்மைப் பயிற்சிகளைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்து, அந்த மாண வர்களைப் பசுமைப் புரட்சிப் பணியில் ஈடுபாடு உள்ளவர்களாகச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே பதிலையும் சொல்லிவிட்டார்கள். 10, 11-வது வகுப்புகளில் பொறியியல், வேளாண்மை போன்ற சிறப்பு பாடங்களை மாணவர் களின் விருப்பப் பாடமாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்போது 44 பள்ளி களில் வேளாண்மைபற்றி கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிந்ததும், அவர்கள் அலுவலகங்களில் பணிபுரியத்தான் விரும்புகிருர்களே தவிர, வேளாண்மையில் ஈடுபட விரும்பவில்லை. ஆகவே இப்போது 8-வது வகுப்பு முடிந்தவுடன், விரும்புகின்ற மாணவர்களுக்கு வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தி, அதில் பயிற்சி அளிக்கலாமா என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவர் களுக்கும் தொழில் பயிற்சிப் படிப்புக் கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் தொழில் பயிற்சிப் படிப்புக்கு வசதி செய்வது என்பது முடியாத ஒன்று. ஆனல் இப்போது 144 பள்ளிகளில் பொறியியல் பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பாடத்திற்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கிறது. மேலும் பள்ளிகளில் விருப்பப்பாடங்களோடு, பல்துறைப் பாடங்களும் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. அதாவது, செக்ரடேரியல் படிப்பு, பொறியியல் படிப்பு, வேளாண்மைப் படிப்பு, மனையியல் படிப்பு, இந்திய இசை, ஓவியம், நெசவுப் பொறியியல் இந்தப் பல் துறைப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இப்போது 144 பள்ளிகளில் பொறியியல் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

1972 மார்ச் 1972]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வேளாண்மைத் துறை படிப்பை இப்போது 10, 11 வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக 6-வது வகுப்பிலிருந்தே அந்தப் பயிற்சியைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 10, 11-வது வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையே சரியாகப் பின்பற்ற முடியவில்லை என்று சொல்கின்றபோது 6-வது வகுப்பிலிருந்து அந்தப் பயிற்சியைத் தொடங்குவது சாத்தியமல்ல. அப்படி 6-வது வகுப்பிலிருந்து பயிற்சி பெற மாணவர்கள் முன்வருவார்களானால், அதைத் தனியாகப் பரிசீலித்து மேற்கொள்ளலாம்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வேளாண்மைப் பயிற்சிக்குத் தனியாகப் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படுமா? இல்லையானால் வேறு தொழில் பயிற்சிப் பள்ளிகளோடு, வேளாண்மைப் பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் வலிவலம் பாலிடெக்னிக் பள்ளியில் விவசாயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இது வெற்றிபெற்றால் மற்ற இடங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தலாம்.

மேட்டுப்பாளையத்திலுள்ள நகரமன்ற உயர்நிலைப்பள்ளி

*** 525. வினா திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரமன்ற ஆண்கள் உயர்நிலைப்பள்ளியினை, அரசு ஏற்கவேண்டுமென, நகரமன்றத்திலிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, 50 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட மேட்டுப்பாளையத்தில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள் குட்டிச் சுவர் போல் காட்சியளிக்கின்றன. நகராட்சியால் அதை சீர்படுத்த முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அரசாங்கம் அந்தப் பள்ளிகளை ஏற்று, பள்ளிக் கட்டடங்களை மாற்றியமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.